**தேசிய சேமிப்பு வங்கி**

-----------------------------------

**1.1 தொகுதி நிதிசார் கூற்றுக்கள்**

வரையறுத்த தேசிய சேமிப்பு வங்கி நிதிய முகாமைத்துவக் கமபனியின் 100 சதவீத பங்கு மூலதனத்தை வங்கி சொந்தமாகக் கொண்டிருந்தது. 2010 டிசெம்பர் 31 மற்றும் முன்னைய ஆண்டு முடிவின்போது முதலீடுகளின் நிலைமை கீழே தரப்பட்டுள்ளது.

| 2010 | | 2009 | |
|---|---|---|---|
| **ஆகுசெலவு** | **பணிப்பாளரது மதிப்பீடு** | **ஆகுசெலவு** | **பணிப்பாளரது மதிப்பீடு** |
| **ரூபா(000)** | **ரூபா(000)** | **ரூபா(000)** | **ரூபா(000)** |
| 150,000 | 150,000 | 150,000 | 150,000 |

**1.2 வங்கியுடனான ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களது ஈடுபாடு**

கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி, நிதிசார் கூற்றுக்களின் 29 ஆம் குறிப்பில் வெளிக்கொணரப்பட்டதைத் தவிர, வங்கியுடனான எந்த ஒப்பந்தத்திலும் நேரடியாகவோ மறைமுகமாகவே வங்கியின் பணிப்பாளர்களுக்கு எதுவித ஈடபாடும் இருக்கவில்லை.

**1.3 திரட்டு நிதிக்கும் பொது ஒதுக்கங்களுக்குமான உதவு தொகை**

நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், கடந்த 5 ஆண்டுகளுக்கான வங்கியின் நிகர இலாபம் மற்றும் திரட்டும் நிதிக்கும் பொது ஒதுக்கங்களுக்குமான உதவு தொகைகள் என்பன கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | தேறிய இலாபம் | திரட்டு நிதிக்கான உதவு தொகை | | பொது ஒதுக்கங்களுக்கான உதவு தொகை | |
|---|---|---|---|---|---|
| | ரூபா('000) | ரூபா('000) | % | ரூபா('000) | % |
| 2006 | 1,884,746 | 1,000,000 | 53 | 790,509 | 42 |
| 2007 | 1,573,074 | 1,250,000 | 79 | 957,086 | 61 |
| 2008 | 1,059,267 | 1,000,000 | 94 | 6,303 | 1 |
| 2009 | 3,714,231 | 1,750,000 | 47 | 1,778,520 | 48 |
| 2010 | 5,401,147 | 2,664,084 | 49 | 2,467,005 | 46 |

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது பரீசிலனைகளிலிருந்து தென்படுவது யாதெனின், முறையான கணக்கீட்டுப் பதிவுகளைப் பேணியுள்ளது என்பதும் 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டில் உள்ளவாறு தேசிய சேமிப்பு வங்கியினது விவகாரங்களது நிலைமை மற்றும் முடிவுற்ற அவ்வாண்டிற்கான அதன் இலாபம் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்களில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தரப்பட்டுள்ளன என்பதும் எனது அபிப்பிராயமாகும்.

வங்கியினது பங்குதாரர்களைப் பொறுத்தவரை, வங்கியினதும் அதனோடு இணைந்துள்ள அதன் துணை நிறுவனங்களதும் ஒருங்கிணைந்த நிதிசார் கூற்றுக்கள் 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான விவகாரங்களது நிலவரம், அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான இலாபம் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வழங்குகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

---

**(அ) இகநி. 18**

---

முற்றாகத் தேய்மானத்துக்குள்ளாகிய ரூபா. 250,806,551 பெறுமதியுடைய நிலையான சொத்துக்கள் மீள மதிப்பீடு செய்யப்படவில்லை.

**(ஆ) இகநி. 36**

---

இலங்கை கடற்படையிடமிருந்து பெறவேண்டிய ரூபா 34,600,000 தொகையானது எதிர்பாராச் சொத்தாக இருந்தபோதிலும், நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகளில் அதனை வெளிப்படுத்தாது ஐந்தொகையில் அதனை ஒரு சொத்தாக வங்கி ஏற்றுக் கொண்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பாதுகாப்புக் காரணங்களினால் சத்தாம் வீதியில் உள்ள கிளை 2009 ஜனவரி 19 அன்று அரசின் சுவீகரிப்புக்குள்ளாகியது. இக்கொடுக்கல் வாங்கல் 2010 ஆம் ஆண்டின் கொடுக்கல் வாங்கலாக நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்களில் காணியின் பெறுமதியாகிய ரூபா. 34,600,000 காணியினதும் கட்டிடங்களினதும் மொத்த செலவிலிருந்து கழித்துக் கொள்ளப்பட்டு ஏனைய பெறவேண்டிய வருமானமாக காட்டப்பட்டிருந்தது. பெறவேண்டிய இத்தொகைக்கான உறுதிப்படுத்தல் அரசிடமிருந்து பெறப்படவில்லை.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்பாடற்ற கணக்குகள் தொடர்பாகத் திறைசேரியிடமிருந்து பெறவேண்டிய முறையே ரூபா. 55,246,473, ரூபா. 105,950,228 என்பன முறையே 3 ஆண்டுகள் 5 ஆண்டுகளாக நிலுவையாக இருந்தன.

(ஆ) மோசடியான பற்றுதல்களின் தொகை ரூபா. 19,836,607 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகவிருந்தது.

(இ) மொத்தக் கடன்கொடுத்தோரின் 15 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா. 2,322,881 கூட்டுத்தொகையுடைய சில்லறைக் கடன்கொடுத்தோர் (கணக்குக் குறியீடு 66103) 2 ஆண்டுகளுக்கு மேலாக தீர்த்து வைக்கப்படாது இருந்தன. மேலும், ரூபா. 4,427,603 தொகையுடைய சில்லறைக் கடன்கொடுத்தோர் 1 முதல் 2 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் நிலுவையாக இருந்தன.

(ஈ) கிளைகளுடன் தொடர்புடைய சில்லறைக் கடன்பட்டோர் தொகையாகிய ரூபா. 57,589 மூன்று ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையாகவுள்ளன.

(உ) கோராப்படாத மீதிகளின் 41 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா. 219,016 இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையாக இருந்தன.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை**

-------------------------------------------------------

பின்வரும் அவதானிபுக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காலப்பகுப்பாய்வு, உடன்படிக்கைகள், மெய்மையாய்வு அறிக்கைகள் போன்ற ஆவணச் சான்றின்மையால் 9 விடயங்களது மீதிகளான ரூபா. 1,789,000,334 கூட்டுத்தொகையைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியவில்லை.

(ஆ) மீளாய்வாண்டினதும் முன்னைய 2 ஆண்டுகளிலும் வழங்கப்பட்ட 119 கணக்காய்வு ஐயவினாக்களில் 2011 யூன் 30 வரை 33 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு வங்கி பதில் வழங்காதிருந்தது. முன்னைய இரு ஆண்டுகளிலும் வழங்கப்பட்ட 71 ஐயவினாக்களின் 9 ஐய வினாக்களையும் இது உள்ளடக்கும்.

**2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கீழே தரப்டுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி அதிகாரச் சட்டத்தின் 84(3) ஆம் பிரிவு | ஒழுக்காற்று முகாமை தொடர்பான விதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வில்லை |
| (ஆ) 2007 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறை வரி அதிகாரச் சட்டம் | பதினொரு கிளைகளில் 103 சந்தர்ப்பங்களில், கணக்குகளை ஆரம்பிப்பதற்கு வாடிக்கை யாளரிடமிருந்து விண்ணப்பத்துடன் வரிப் பிரகடனக் கூற்றுக்கள் பெறப்படாதிருந்தன. |
| (இ) நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 104 | இருபத்தைந்து மோட்டார் வாகன விபத்துக்கள் சம்பந்தமாக ஆரம்ப மற்றும் இறுதி அறிக்கைகள் தயாரிக்கப்பட வில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 756 | மீளாய்வாண்டிற்கான 56 கிளைகளதும் 25 பிரிவுகளதும் பொருட்கணிப்பு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | (iii) நிதிப்பிரமாணம் 1646 | நாற்பத்தாறு மோட்டார் வாகனங்களது மாதாந்தச் செயற்பாட்டுப் பொழிப்புகளும் நாளாந்த ஓட்ட அட்டவணைகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) | நிதிப்பிரமாணம் 135(5)(அ)(ஆ) மற்றும் 2003 யூன் 2 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8-8 ஆம் பிரிவு என்பன | வங்கியின் நிதிக் கட்டுப்பாட்டு அதிகாரக் கையளிப்பு ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்திலும் நாளது வரையாக்கப் பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2006 ஒக்டோபர் 5 ஆந் திகதிய 6 ஆம் இலக்கத்தால் திருத்தப் பட்டவாறான 2006 ஜனவரி 25 ஆந் திகதிய 8 ஆம் இலக்க தேசிய கொள்வனவு முகவராண்மையின் அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டல்கள்<br>---------------------------------------------- | |
| | (i) அத்தியாயம் 2.14.1 மற்றும் 3.4 | திறந்த போட்டிக் கேள்விகோரல் நடைமுறை பின்பற்றப்படாது கடைகளில் பொருட்கொள்வனவு செய்யும் அடிப்படையில் ரூபா. 45 மில்லியனுக்கும் கூடிய செலவில் வங்கிக்கான வெளியகப் பாதுகாப்புச் சேவை தெரிவு செய்யப்பட்டிருந்தது. |

(ii) பிரிவு 3.2

பொருட்கள், சேவைகள் என்பவற்றின் கொள்வனவிற்காக பெறுமதி ரூபா. 2 மில்லியனை அதிகரிக்குமிடத்து திறந்த போட்டி கேள்வி நடைமுறை கடைப்பிடிக்கப்பட வேண்டிய போதிலும் பின்வரும் கொள்வனவுகளுக்குக் கடைகளில் பொருட் கொள்வனவு செய்யும் நடைமுறையே பின்பற்றப்பட்டிருந்தது.

(i) அஞ்சல் அலுவலகங்களுக்கு ரூபா. 4,335,575 ஆகு செலவில் 50 Point of Sale Terminals கொள்வனவு

(ii) வங்கியின் 15 ரூபா. 2,472,885 கிரயத்தில் வங்கியின் 15 பியாசா கிளைகளிற்கான தளபாடக் கொள்வனவு

(iii) பிரிவுகள் 5.3.2, 6.2.2 என்பன

கொள்வனவு வழிகாட்டிக் கோவையில் வேண்டப்பட்டவாறு 50,000 விசில் ஒலியெழுப்பும் கேத்தல்களை ரூபா. 3,375,000 கிரயத்தில் கொள்வனவு செய்வதற்கான கூறு விலைகளுக்கு 21 நாட்களுக்குப் பதிலாக 17 நாட்கள் வழங்கப்பட்டிருந்தன.

(iv) பிரிவு 4:2:1

2010 ஆம் ஆண்டிற்கான பிரதான கொள்வனவு திட்டமும் விரிவான கொள்வனவுத் திட்டமும் தயாரிக்கப்பட வில்லை.

(ஊ) தேசிய சேமிப்பு வங்கி பொது முகாமையாளரது 445/1998 ஆம் இலக்க சுற்றறிக்கை

கிளை ஒன்றினது கணனி நடவடிக்கைகளின் முகாமைத்துவ அதிகாரம் ஒரு உத்தியோகத்தருக்கு மாத்திரமே கையளிக்கப்பட வேண்டிய போதிலும், 6 கிளைகளில் அவ்வாறான அதிகாரம் பல உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| (எ) | தேசிய சேமிப்பு வங்கி பொது முகாமையாளரது 681/2007 ஆம் இலக்க சுற்றறிக்கை | (i) வங்கியின் 14 கிளைகள் 255 கணக்குகளை ஆரம்பிக்கையில் ஒவ்வொரு வாடிக்கையாளரதும் தேசிய அடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழ் என்பவற்றின் பிரதிகள் பெறப்படவில்லை.<br><br>(ii) வாடிக்கையாளரிடமிருந்து விண்ணப்பப் படிவத்துடன் அறிந்த உங்கள் வாடிக்கையாளர் (Kye) படிவங்கள் 79 சந்தர்ப்பங்களில் 9 கிளைகளால் பெறப்படவில்லை. |
| (ஏ) | தேசிய சேமிப்பு வங்கி பொது முகாமையாளரது 769/2010 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | பத்து நாட்களுக்கு மேலாகப் பயன்படுத்தப்படாதிருக்கும் சகல இரகசிய குறியீடுகளும் கிளை முகாமையாளரால் வலுவிலக்கச் செய்யப்பட வேண்டும். எனினும் 9 கிளைகளின் முகாமையாளர்கள் இவ்வறிவுறுத்துரைக்கு அமைய செயற்பட வில்லை. |

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 நிதிசார் விளைவுகள்

---

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின்போது வங்கியின் செயற்பாட்டினால் ஏற்பட்ட வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா. 9,788 மில்லியனை இதனோடொத்த முன்னயை ஆண்டின் வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா. 6,944 மில்லியனுடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா. 2,844 மில்லியன் அல்லது 41 சதவீத அதிகரிப்பை இது சுட்டிக் காட்டுகின்றது. முதலீட்டுப் பிணை முறிகளிலிருந்து பெறப்பட்ட ரூபா. 1583 மில்லியன் இலாபமே இவ்வதிகரிப்பிற்கான பாரிய பங்களிப்பாக இருந்தது.

வங்கியின் துணை நிறுவனத்தினது செயற்பாட்டினால் மீளாய்வாண்டில் ஏற்பட்ட வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா. 435 மில்லியனை

இதனோடொத்த முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா. 1,115 மில்லியனுடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா. 680 மில்லியன் வீழ்ச்சியைக் காட்டுகிறது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வரிக்கு முன்னரான இலாபம் ரூபா. 9,788 மில்லியனானது இது தலைமை அலுவலகத்தின் ரூபா. 4,695 மில்லியன் இலாபம் மற்றும் 145 கிளைகளின் (வங்கிக் கிளைகள் , அஞ்சலுவலகக் கிளைகள் பியச கூறுகள் மற்றும் பிரிவுகள்) ரூபா. 5,281 மில்லியன் இலாபம் என்பவற்றிலிருந்து 47 வங்கிக் கிளைகளின் ரூபா. 188 மில்லியன் நட்டத்தைக் கழித்த தொகையையும் உள்ளடக்கியிருந்தது.

(இ) முன்னைய ஆண்டின் திரண்ட வருவாயுடன் ஒப்பிடுகையில் வங்கியின் திரண்ட வருமானம் ரூபா. 904 மில்லியனால் குறைவடைந்திருந்தமையை சுட்டிக்காட்டுவதுடன் இது 1.8 சதவீத வீழ்ச்சியைக் காட்டுகிறது.

(ஈ) புதிய தகவல் தொழில்நுட்ப முறைமைக்கு வங்கியால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ரூபா. 250,000,000 ஆகும். எவ்வாறாயினும், நிதிசார் கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்புகளின்கீழ் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியனவாக இது ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

**3.2 முக்கியமான விகிதங்களும் வீதங்களும்**

கிடைக்கப் பெற்ற தகவலின்படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சில முக்கிய விகிதங்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2010 | 2009 |
|---|---|---|
| | % | % |
| **(அ) இலாபத் தன்மை மட்டம்** | | |
| (i) தேறிய வட்டி எல்லை | 32.43 | 28.62 |
| (ii) மூலதனத்தின் மீதான வட்டி | 26.36 | 20.91 |
| **(ஆ) மூலதனத்தின் போதியளவு தன்மை** | | |
| மூலதனம் / மொத்தச் சொத்துக்கள் | 0.05 | 0.05 |
| **(இ) திரவச் சொத்துக்கள்** | | |
| வைப்புக்கள்/கடன்களும் முற்பணங்களும் | 4.35 | 4.58 |

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தேறிய வட்டி எல்லையும் மூலதனத்தின் மீதான பெறுபேறும் மீளாய்வாண்டின்போது குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் கடன்களுக்கும் முற்பணத்திற்கும் எதிரான வைப்புகள் சிறிது குறைந்திருந்தன.

### 3.3 கிளைகளது செயற்திறன்

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டவாறான மீளாய்வாண்டினது வங்கிக் கிளைச் செயற்திறன் கீழே தரப்பட்டுள்ளது.

| | | 2010 | 2009 |
|---|---|---|---|
| (அ) | கிளைகளின் எண்ணிக்கை | 186 | 126 |
| (ஆ) | சேமிப்புக் கடைகளது எண்ணிக்கை | - | - |
| (இ) | அஞ்சலகக் கிளைகளின் எண்ணிக்கை | 19 | 19 |
| (ஈ) | அஞ்சலலுவலகங்களின் எண்ணிக்கை | 4,053 | 4,055 |
| (உ) | கணக்கு வைத்திருப்பவர்களின் எண்ணிக்கை (மில்லியன்) | 16.7 | 16.3 |
| (ஊ) | ஏரீஎம் களது எண்ணிக்கை | 191 | 148 |
| (எ) | பியசக்களின் எண்ணிக்கை (கூறுகள்) | - | 19 |
| (ஏ) | பாடசாலை வங்கிக் கூறுகளின் எண்ணிக்கை | 373 | 262 |

மீளாய்வாண்டின்போது 60 புதிய கிளைகள் திறக்கப்பட்டதுடன் 19 அஞ்சல் அலுவலகக் கூறுகளும் பியச கூறுகளும் கிளைகளாக மாற்றஞ் செய்யப்பட்டிருந்தன. வங்கியின் செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டும் விதத்தில் மீளாய்வாண்டின்போது கணக்கு வைத்திருப்பவர்கள் 0.4 மில்லியன் அதிகரித்தும் ஏரீஎம் வலையமைப்பு 148 முதல் 191 வரையில் அதிகரித்துமிருந்தன.

### 3.4 முதிர்வின் வகை

சொத்துக்களதும் பொறுப்புகளதும் முதிர்வின் வகைகள் கீழே உள்ளவாறு அமையும்.

| | 3 மாதங்கள் வரை | 3-12 மாதங்கள் | 1-3 ஆண்டுகள் | 3-5 ஆண்டுகள் | 5 ஆண்டுகளுக்கு மேற்பட்டவை |
|---|---|---|---|---|---|
| | ரூபா. மில். | ரூபா. மில். | ரூபா. மில். | ரூபா. மில். | ரூபா. மில். |
| **சொத்துக்கள்** | | | | | |
| வட்டியைத் தருவன | 55,830 | 94,084 | 134,239 | 52,419 | 39,603 |
| வட்டியைத் தராதன | 9,780 | 11,485 | 284 | 53 | 5,453 |
| | 65,610 | 105,569 | 134,523 | 52,472 | 45,056 |
| **பொறுப்புகள்** | | | | | |
| வட்டியைத் தருவன | 196,587 | 160,474 | 6,259 | 3,209 | - |
| வட்டியைத் தராதன | 5,783 | 7,523 | 2,635 | 246 | 20,515 |
| | 202,370 | 167,997 | 8,894 | 3,455 | 20,515 |
| திரவவியல் இடைவெளி | (136,760) | (62,428) | 125,629 | 49,017 | 24,541 |

மாதாந்த மட்டத்தில் வங்கியினது சொத்துக்களினதும் பொறுப்புகளினதும் முதிர்ச்சிச் சரிதத்தைப் பகுப்பாய்வு செய்கையில் சொத்துக்களை அதிகரிக்குமாறு மொத்தப் பொறுப்புகள் உள்ளதும் 2010 ஆம் ஆண்டில் 3 மாதங்கள் வரையிலானதும் 3-12 மாதங்கள் வரையிலானதுமான குறுகிய கால திரவ இடைவெளி முறையே ரூபா. 136,760 மில்லியன் ரூபா. 62,428 மில்லியன் ஆகவுள்ளதும் புலனாகியது.

## 3.5 கடன் நிர்வாகம்

3.5.1 முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டவாறான மீளாய்வாண்டு முடிவுரை வழங்கப்பட்ட கடன்களதும் முற்பணங்களதும் நிலைமை பின்வருமாறு.

| வசதி | கணக்குகளின் எண்ணிக்கை | | வழங்கப்பட்ட தொகை | |
|---|---|---|---|---|
| | 2010 | 2009 | 2010 (ரூபா.மில்) | 2009 (ரூபா.மில்) |
| வீட்டு மற்றும் ஆதனக் கடன்கள் | 8,003 | 3,536 | 7,722 | 3,482 |
| அடகுபிடிப்பதற்கான கடன் | 990,790 | 551,459 | 36,185 | 15,324 |
| தனிப்பட்ட கடன்கள் | 2,090 | 4,396 | 283 | 357 |
| செயற்திட்டக் கடன்கள் | 1 | 12 | 1,638 | 5,185 |
| வாகனக் கடன்கள் | 45 | 5 | 55 | 8 |
| இலங்கை அரசாங்கத்திற்கான கடன்கள் | 1 | 2 | 280 | 6,570 |
| மொத்தம் | 1,000,930 | 559,410 | 46,163 | 30,926 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆளுக்குரிய கடன் கணக்குகளினதும் செயற்திட்டக் கடன் கணக்குகளினதும் எண்ணிக்கை முறையே குறிப்பிடத்தக்களவு 2,306 அல்லது 52% மற்றும் 11 அல்லது 92% குறைவடைந்திருந்தது.

### 3.5.2 ரூபா. 80 மில்லியன் செலவில் வீடமைப்பு திட்ட நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட செயற்திட்டக் கடன்

இக்கொடுக்கல் வாங்கல் மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீடமைப்பத் திட்டமொன்றிற்காக மேற்படி கடனாகிய ரூபா. 80 மில்லியன் இரு தடவைகளில் வழங்கப்பட்டிருந்தது. கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய காலம் முடிவுறும் வரை தவணைப் பணம் மற்றும் வட்டி என எதுவுமே கொடுப்பனவு செய்யப்படவில்லை.

(ஆ) ஏலத்தின்போது சொத்தைக் கொள்வனவு செய்வதற்கு வாடிக்கையாளர் யாருமே இல்லாததால் வங்கியே சொத்தைப் பொறுப்பேற்றிருந்தது.

(இ) ரூபா. 184 மில்லியன் பெறுமதியுடைய சொத்தின் விஸ்தீரணம் 2 ஏக்கர், 3 றூட், 31.7 பர்ச்சஸ் ஆகும். இதன்இலங்கை கடற்படை இக்காணியைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா. 130 மில்லியனை மாத்திரமே கொடுப்பனவு செய்திருந்தது. ரூபா. 50 மில்லியன் வசதியைப் பெறுவதற்காக மற்றுமொரு வங்கிக்குச் சொத்து ஈடாக உறுதிசெய்யப்பட்டபோதும், ஏலத்தின் மூலம் பெறப்பட்ட தொகையை 8:5 எனும் விகிதத்தில் பகிர்ந்து கொள்வதற்கு 2 வங்கிகளும் உடன்பட்டிருந்தன.

(ஈ) இலங்கை கடற்படையால் கொள்வனவு செய்யப்பட்ட வீடமைப்புத் திட்டத்தில் உள்ள 35 வீடுகளில் 5 வீடுகளுக்கு மூன்றாம் நபர்களால் வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. மேற்படி 5 வீடுகள் தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பின்படி, வங்கி ரூபா. 9.7 மில்லியனைச் செலுத்தியிருந்தது. இது தொடர்பாக வங்கி பெற்றுக் கொண்ட தேறிய தொகை ரூபா. 70.3 மில்லியன் ஆகும். இதன் மூலம் வங்கிக்கு ஏற்பட்ட இழப்பு ரூபா. 42.9 மில்லியன் ஆகும்.

(உ) 2009 யூன் மாதத்தில் ரூபா. 13.3 மில்லியன் பெறுமதியான காணியொன்று அரசுடமையாக்கப்பட்டது. இக்கொடுக்கல் வாங்கலுக்கு வங்கி கொடுப்பனவு எதனையும் பெறவில்லை.

(ஊ) சுற்றுலா விடுதி ஒன்றை நிர்மாணிப்பதற்காக காணி ஒன்றினது ஒரு பகுதியினை வங்கி பொறுப்பேற்றிருந்தது. இதன் பொருட்டு தனது பெறுமதிக்குரிய பங்காக மற்றுமோர் வங்கிக்கு ரூபா. 2.1 மில்லியனைச் செலுத்தியிருந்தது. எவ்வாறாயினும் சுற்றுலா விடுதியை நிர்மாணிப்பதற்கு வங்கி எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

### 3.5.3 செயற்பாடற்ற கடன்கள்

கிடைக்குமாறு செய்யப்பட்ட தகவல்களின்படி மொத்தச் செயற்பாடற்ற கடன்கள், கடன் இழப்பிற்கான நிதியேற்பாடு மற்றும் சந்தேகத்துக்குரிய வட்டி என்பன கீழே தரப்பட்டுள்ளன.

| கடன் வகை | நிலுவையாகவுள்ள மொத்தக் கடன்கள் | செயற்பாடற்ற கடன்கள் | கடன் இழப்பு நிதியேற்பாடு | சந்தேகத்திற்குரிய வட்டி |
|---|---|---|---|---|
| | **ரூபா.மில்** | **ரூபா.மில்** | **ரூபா.மில்** | **ரூபா.மில்** |
| வீடமைப்பு, ஆதனக் கடன் | 33,215 | 2,046 | 504 | 203 |
| அபிவிருத்தி நிதிக் கடன்கள் | 6,018 | 9 | 90 | - |
| தனிப்பட்ட கடன் | 660 | 63 | 33 | 12 |
| ஏனையவை | 42,446 | 1 | 5 | 2 |
| | 82,339 | 2,119 | 632 | 215 |

### 3.5.4 கடன் இழப்புக்கான நிதியேற்பாடு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான கடன் இழப்பு நிதியேற்பாட்டு விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| காலப்பகுதி | நிலுவையாக உள்ள மூலத் தொகையின் மீதிக்கான நிதியேற்பாடு | | நிலுவையாக உள்ள கடன் மீதி | | நிதியேற்பாடு | |
|---|---|---|---|---|---|---|
| | 2010 | 2009 | 2010 | 2009 | 2010 | 2009 |
| | % | % | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| 6-12 மாதங்கள் | 0.97 | 0.78 | 372,017,000 | 538,656,489 | 3,614,000 | 4,181,409 |
| 12-18 மாதங்கள் | 5.28 | 9.14 | 141,438,000 | 102,005,095 | 7,471,000 | 9,319,338 |
| 18 மாதங்களுக்கு மேற்பட்டன | 13.86 | 25.2 | 218,179,000 | 114,539,249 | 30,239,000 | 29,085,185 |

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 2006 மே 4 ஆந் திகதியன்று ஏலமிடப்பட்ட காணிக்காகப் பெற்றுக்கொண்ட வைப்புத் தொகையான ரூபா. 1,861,382 சில்லறைக் கடன்கொடுத்தோர் தொங்கற் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தது. இச்சொத்து தொடர்பான வழக்கு முடிவுறாததால் இவ்வறிக்கைத் தினம் வரை இத்தொகை தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

(ஆ) 8 வீடமைப்புக் கடன்கள் தொடர்பாக 2000 முதல் 2009 வரையான காலப்பகுதியில் கிளையால் பொறுப்பேற்கப்பட்ட சொத்துக்களும் செயற்திட்டத்திற்கான கடன் ஒன்றும் ரூபா. 14,932,216 ஆகும். மேலும் தொடாந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அறிவிக்கப்படவில்லை. மேலும், மூன்று கடன் கணக்குகள் தொடர்பான நீதிமன்ற வழக்குகள் நிலுவையிலுள்ளதென அவதானிக்கப்பட்டது.

## 3.6 செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

### 3.6.1 எஸ்எம்ஐஎல்ஈ கணக்கினது விற்பனை மேம்பாட்டு நடவடிக்கைகள்

-----------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன

2010 ஒக்டோபர் 31 இல் ''எஸ்எம்ஐஎல்ஈ'' எனப்படும் புதிய சேமிப்புக் கணக்கு அறிமுகப்படுத்துகின்ற பிரதான நோக்கம், கிராமிய மக்களிடையே சேமிப்பை அபிவிருத்தி செய்தல், உள்ளுர் சேமிப்புச் சதவீதத்தை அதிகரித்தல், வைப்பாளர்களுக்கு அதிக நலன்மிக்க சேமிப்புக் கணக்கை அறிமுகஞ் செய்து வைத்தல் என்பனவேயாம். இப்புதிய சேமிப்பு அமைப்பின் மூலம் 2011 ஆம் ஆண்டில் ரூபா. 4 பில்லியன் வைப்புப் பெறுமதியை வங்கி இலக்காகக் கொண்டிருந்தது.

(அ) வங்கியின் பொது முகாமையாளரது 750/2009 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் பிரகாரம், புதிய உருவாக்கங்களை அறிமுகஞ் செய்கையில் கடைப்பிடிக்க வேண்டிய விசேட வழிகாட்டல்கள் தெளிவுறுத்தப்பட்டுள்ளன. அதே வேளையில், உருவாக்க அபிவிருத்திக்குழு வங்கியின் புது உருவாக்கங்களை அபிவிருத்தி செய்ய பொறுப்புடையதாகும். எவ்வாறாயினும் புதிய ''எஸ்எம்ஐஎல்ஈ'' சேமிப்புக் கணக்கை அறிமுகஞ் செய்கையில் அவ்வழிகாட்டல்கள் வங்கியால் கடைப்பிடிக்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2008 ஆகஸ்ட் 26 அன்று அறிமுகஞ் செய்யப்பட்ட ''ஹெப்பி சேவிங்ஸ்'' கணக்கின் பின்னர் ''எஸ்எம்ஐஎல்ஈ'' சேமிப்புக் கணக்கை வங்கி அறிமுகஞ் செய்துள்ளது கடந்த இரு ஆண்டுகளில் வேறு கணக்குகள் எதுவும் அறிமுகஞ் செய்து வைக்கப்படவில்லை.

## 3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------

### தேசிய சேமிப்பு வங்கியின் பதினெட்டு மாடிக் கட்டிடம்

-----------------------------------------------------------------------------------------

தேசிய சேமிப்பு வங்கிக்கு 18 மாடிகளைக் கொண்ட புதிய கட்டிடம் ஒன்றைக் நிர்மாணிப்பதற்கான அங்கீகாரத்தை 2006 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபை வழங்கியிருந்து. ஆனால், கட்டிடம் அமையவிருந்த இடம் அரசினால் பிரகடனப்படுத்தப்பட்ட அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் இருப்பதால் 2007

செப்டெம்பர் 21 ஆந் திகதிய பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின்படி நிர்மாணவேலை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. ஆகவே, செயற்திட்ட நடவடிக்கைகள் மீதான ரூபா. 35,228,367 பயனற்ற செலவினமாக இனங்காணப்பட்டது.

**3.8 முதலீடுகள் மீதான நலன்கள்**

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான முக்கிய முதலீடுகளின் மீதான ஆகுசெலவு மற்றும் அவற்றால் பெறப்பட்ட இலாபம் என்பன கீழே தரப்பட்டுள்ளன.

| முக்கிய முதலீடு | முதலீட்டிற்கான செலவு | இலாபம் | முதலீடு மீதான நலன் |
|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | % |
| ஹற்றன் நஷனல் வங்கி | 1,106,777,575 | 31,479,255 | 2.84 |
| ஸ்ரீ லங்கா டெலிகொம் | 445,642,518 | 2,960,708 | 0.66 |
| | 1,552,420,093 | 34,439,963 | |

ஹற்றன் நஷனல் வங்கி மற்றும் ஸ்ரீலங்கா டெலிகொம் என்பவற்றின் முதலீட்டு நலன் முறையே 2.84 சதவீதம், 0.66 சதவீதம் எனக் காட்டப்பட்டுள்ளன. ஆகவே, மேற்படி முக்கிய முதலீடுகள் மீதான ஒட்டுமொத்த இலாபம் 2.2 சதவீதம் மாத்திரமே. 2010 ஆம் ஆண்டின்போது வங்கியின் மந்தகெதியிலான இலாபத்தை இது காட்டுகின்றது.

(ஆ) வங்கியானது 2010 டிசெமப்ர் 31 உள்ளவாறு 50 கம்பனிகளின் பங்குகளில் ரூபா 5,323,778,529 முதலீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், ரூபா. 1,835,081,390 முதலீடு செய்யப்பட்ட 27 கம்பனிகளிருந்து பங்கிலாபம் கிடைக்கப் பெறவில்லை. குறித்த கம்பனிகளது மொத்த முதலீட்டு செலவுடன் ஒப்பிடுகையில், அவ்வாறான முதலீடுகள் 34.47 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

(இ) பதினேழு கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்ட ரூபா. 1,462,468,337 தொடர்பாகப் பங்கிலாம் பெறப்படவில்லை. மொத்த முதலீட்டின் 27.47 சதவீதத்தை இது பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

(ஈ) வங்கியின் மொத்த முதலீட்டில் 10.67 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா. 567,965,955 வங்கியால் இந்தியன் ஓயில் கம்பனியில் (ஐஓசீ) முதலீடு செய்யப்பட்டிருந்தது. 2008, 2009, 2010 ஆம் ஆண்டுகளில் இம்முதலீட்டின் மூலம் இலாபம் எதுவும் பெறப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது. ஆகவே, அக்காலப்பகுதியில் முதலீடு மீதான இலாபம் பூச்சியமாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(உ) 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் முதலீடுகளுக்காகக் கிடைத்த பங்கிலாபம் முறையே ரூபா. 48,183,938 மற்றும் ரூபா. 88,250,954 என்பனவாகும். இவை மொத்த முதலீட்டின் 2.21 சதவீதம் மற்றும் 1.66 சதவீதம் என்பவற்றைப் பிரதிநித்துவப்படுத்தின.

## 3.9 மனிதவள முகாமைத்துவம்

-------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 2 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2 ஆம் பிரிவின் பிரகாரம் தற்போதுள்ள ஊழியர் கோப்பிற்குப் பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தினது அங்கீகாரம் பெறப்படவில்லை.

(ஆ) பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பும் 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளபடியான ஊழியர் கோப்பும் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பு | உள்ளபடியான ஊழியர் கோப்பு | வெற்றிடம் | மிகை நிலைமை |
|---|---|---|---|---|
| நிறைவேற்றுதரம் | 558 | 498 | 83 | 23 |
| மேற்பார்வைத் தரம் | 1,156 | 860 | 296 | - |
| நிறைவேற்றுதரம் அல்லாதன (பதவிநிலைத் தரம் அல்லாதன) | 1,525 | 1,474 | 445 | 394 |
| சிற்றூழியர் | 317 | 218 | 100 | 1 |
| | 3,556 | 3,050 | 924 | 418 |

(i) அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கோப்பின்படி, முகாமைத்துவத்தின் நிறைவேற்றுதர மட்டம் 558 உத்தியோகத்தர்களைக் கொண்டுள்ளது. எவ்வாறாயினும், ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட 8 உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய உள்ளபடியான ஊழியர் கோப்பு 498 ஆகும். மேலும் 83 வெற்றிடங்களுடன் பதவி உயர்வுத் தாமதம் காரணமாக 23 மிகையும் நிலவின.

(ii) நிறைவேற்று தரத்தினது உயர்மட்ட முகாமைத்துவம் வங்கியன் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பின் விசேட தரம் மற்றும் தரம் 1 என்பவற்றைக் குறிக்கின்றது. வங்கியின் தற்போதைய ஊழியர் கோப்பு 21 விசேட தர உத்தியோகத்தர்களைக் கொண்டுள்ளது. அதில் 3 பேர் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர். ஆவர். மேலும், வங்கியின் தற்போதைய ஊழியர் கோப்பில் I ஆந் தரம் 44 உத்தியோகத்தர்களைக் கொண்டிருந்தது. அதில் 5 பேர் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டவர் ஆவர். எவ்வாறாயினும், 2010 டிசெம்பர் முடிவு வரை உயர் மட்ட முகாமைத்துவத்தில் ஆட்சேர்ப்பு இடம்பெறாது 14 பதவிகள் காலியாக இருந்தன.

(iii) அங்கீகரிக்கப்பட்ட வங்கி உதவியாளர் பதவிகள் 920 மாத்திரமேயாகும். எனினும், நிரந்தர அடிப்படையில் 1,047 உதவியாளர்களை வங்கி ஆட்சேர்த்திருந்தது. 259 உதவியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் உள்ளனர். ஆகவே அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பில் 386 வங்கி உதவியாளர்கள் மிகையாக இருந்தன.

(இ) பொது முகாமையாளரது வாகனம் குறைந்த பராமரிக்கப்படாமையால் போக்குவரத்து முகாமையாளர் நிர்வாகப் பிரிவுக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டிருந்தார். மேலும், போக்குவரத்து முகாமையாளரின் பதவிப் பெயர் போக்குவரத்து முகாமையாளர் (தொழில்நுட்பம்) என மாற்றஞ் செய்யப்பட்டு அவரது தகுதிகாண் காலமும் ஓராண்டால் நீடிக்கப்பட்டிருந்தது.

(i) பதவிப் பெயர் மாற்றத்திற்குச் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டதற்கான சான்று இருக்கவில்லை.

(ii) இதே வேளையில், 2009 டிசெம்பர் முதல் 2010 டிசெம்பர் வரையான காலப் பகுதியின்போது நியமிக்கப்பட்டதுடன் மேலதிக உத்தியோகத்தர்களுக்கு அக்காலப்பகுதியின்போது ரூபா. 1,192,969 சம்பளமும் படியுமாக வழங்கப்பட்டிருந்தது.

## 3.10 கடப்பாடும் நிகழத்தக்கவையும்

-----------------------------------------------------

வங்கியானது பல்வேறு வகையான வழக்குகளில் ஈடுபட்டிருந்தது. சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 35 வழக்குகள் தீர்த்து வைக்கப்படாதிருந்தன.

## 3.11 கூட்டிணைந்த திட்டமும் செயல் திட்டமும்

-----------------------------------------------------------------------

(அ) மீளாய்வாண்டிற்கான கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்ட சில இலக்குகள் எய்தப்பெறவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட சில இலக்குகள் எய்தப்பெறவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------------

கணக்காய்வின்போது முறைமைகளிலும் கட்டுப்பாடுகளிலும் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது வங்கியின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

- கணக்கீடு
- வரவு, செலவுத் திட்டம்
- கடன் நிர்வாகம்
- பொருட்பதிவேட்டுக் கட்டுப்பாடு
- ஆவணப்படுத்தல்
- கடன்பட்டோரும் கடன்கொடுத்தொரும்
- சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கம்
- நிலையான சொத்துக்கள்
- கணக்குகள் - ஆரம்பித்தலும் மூடுதலும்
- கணனி நடவடிக்கைகள்